"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4229,71,35,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

3. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

3. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(உ) உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கவிருக்கும் விருந்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கும் விருந்தில் கலந்துகொள்ள ஏதுவாக இன்று மாலை சட்டமன்றப் பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் உறுப்பினர்கள் இங்கிருந்து நேராக தாஜ் கொரமண்டல் ஓட்டலுக்குச் செல்ல பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (குறுக்கீடு)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மிகப் பெரிய வறட்சி இன்று நிலவிக் கொண்டிருக்கின்றது. இந்த நேரத்திலே இப்படிப்பட்ட ஒரு விருந்து தேவைதானா என்பதை முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஹேமச்சந்திரன், முதலமைச்சர் அவர்கள்—இது எல்லா உறுப்பினர்களும் கொஞ்சம் கலந்து, ஒன்றாகப் பழக வேண்டும் என்பதற்காக செய்யப்படக் கூடியது. விருந்தாக அல்ல. எல்லோரும் கலந்து பேச வேண்டும் என்பதற்காகத்தான்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS